உ
சிவமயம்

பாண்டிவள நாட்டின்கண் உள்ள
சமிவனச் க்ஷேத்திரமென்னும் ஸ்ரீகோவிலூர்
ஸ்ரீலஸ்ரீ முத்திராமலிங்க ஞானதேசிகஸ்வாமி
அவர்கள்
ஆதின மடாலயத்தில்
எட்டாவது குருமூர்த்திகளாக எழுந்தருளியுள்ள
ஸ்ரீலஸ்ரீ
சோமசுந்தர ஞானதேசிக ஸ்வாமிகள்
அவர்கட்கு
சோம. கோபால் அய்யா அவர்களால்
இயற்றப்பெற்றுச் சூட்டிய

போற்றிப் பாமாலை

இது கொப்பனுபட்டி
ராம. அழ. அழகப்ப செட்டியாரால்
வெளியிடப்பட்டன.

1970

உ
சிவமயம்

பாண்டிவள நாட்டின்கண் உள்ள
சமிவனச் க்ஷேத்திரமென்னும் ஸ்ரீகோவிலூர்
ஸ்ரீலஸ்ரீ முத்திராமலிங்க ஞானதேசிகஸ்வாமி
அவர்கள்
ஆதின மடாலயத்தில்
எட்டாவது குருமூர்த்திகளாக எழுந்தருளியுள்ள
ஸ்ரீலஸ்ரீ
சோமசுந்தர ஞானதேசிக ஸ்வாமிகள்
அவர்கட்கு
சோம. கோபால் அய்யா அவர்களால்
இயற்றப்பெற்றுச் சூட்டிய

போற்றிப் பாமாலை

இது கொப்பனுபட்டி
ராம. அழ. அழகப்ப செட்டியாரால்
வெளியிடப்பட்டன.

1970

உ

சிவமயம்

முகவுரை

கலியுகாதி 5071ம் வருடம், சாதாரண ஆண்டு ஆவணி மாதம் 5-ஆம் தேதி, வெள்ளிக்கிழமை (21—8—1970) ஸ்ரீ கோவிலூர் மடாலயம், எட்டாவது பட்டத்து மகா சன்னிதானங்கள், ஸ்ரீலஸ்ரீ, சோமசுந்தர ஞானதேசிக ஸ்வாமிகள் அவர்கள் மாணுக்கர்களான, சோம. இராமலிங்க சுவாமி, சோம. விஞயகானந்த சுவாமி, சோம. மருதமுத்து ஐயா, சோம. கோபால் ஐயா ஆகியோர், ஸ்ரீ ஞானவாசிட்டப் பாடம் கேட்டு முடித்து, மேற்படி, ஸ்ரீ குருமூர்த்திகளுக்கு மிகச் சிறப் பாகத் திருப்பாத (அபிஷேக) பூசை செய்து, ஏடு வாங்கின போழ்து, வாசித்துச்சூட்டின போற்றிப் பாமாலை.

வெளியீடு,
ராம.அழ. அழகப்ப செட்டியார்,
கொப்பனுபட்டி
திருச்சி ஜில்லா.

ஆக்கம்,
சோம. கோபால்ஜயா,
கோவிலூர் மடம்,
கோவிலூர்.

உ

ஸ்ரீ குருஸ்துதி.

சுத்த நிர்க்குணச் சொருபமே சுயமாய்
சோம சுந்தரப் பெயருரு சுமந்து
பத்தி சாதன மொன்றிலா வெனையும்
படிமீ தாளவே வுவந்துவந் துதித்து
சத்தி யபிரம சொருபமாய்த் தயைநட்
பாதிய நற்குணஞ் சார்ந்த வடிவாம்
சுத்த மெய்ஞ்ஞான சோம சுந்தரச்
சுத்தக் குருபதம் தொழுது வாழ்த்துவாம்.

சோம. இராமலிங்க சுவாமி.

சிவமயம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞான தேசிக ஸ்வாமிகள் அவர்கட்குப் போற்றிப் பாமாலை

ஸ்ரீ கணேசர் துதி

வாசிட்டப் பாடம் வழங்கிய வாசானுக்கு
ஆசித்துப் பாமாலை யாக்கவே – பூசிக்கத்
தக்க கரிமுகவுன் றாளைப் பணிந்தேனென்
பக்கதுணை யாயிருப் பாய்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

முத்தியி ராம லிங்க முனிவர ரருளைப் பெற்று
சத்திய ஞான போதஞ் சார்ந்தவர்க் கீந்து தீய
மித்தியா பந்தம் போக்கி மிக்கவா னந்த மீயும்
மெத்திய சோம சுந்த்ர மெய்த்தவக் குருவே போற்றி. 1

நவவபி வித்யா தீர்த்த நற்குரு வருளைப் பெற்று
புவனியில் நெடுநாள் நின்று புனிதவே தாந்தம் தன்னை
பவப்பிணி யகல வென்று பணிவுட னறிவோர்க் கெல்லாம்
நவமதா யுரைக்கு மெங்கள் நற்குரு பாதம் போற்றி. 2

முத்திரா மீச னூர்க்கும் முதுதுற விறைவ னூர்க்கும்
மெத்துநா றிருப தென்னும் மேதகு வாண்டு பூசை
பத்தியோ டியற்றி யெங்கும் பரவுநற் புகழைப் பெற்ற
உத்தம யெட்டாம் பட்டத் துயர்குரு பாதம் போற்றி. 3

சுகமெங் கேயெங் கேயென்று சுற்றியே திரிந்த வென்னை
அகமுக மாக வென்றும் அகலாது கொள்வா யாகின்
மிகசுக மங்கே யுண்டு மித்தையே மற்ற வெல்லாந்
தகவுயர் நெறியீ தென்ற தத்துவக் குருவே போற்றி. 4

சிரவணம் மனனம் த்யானஞ் சீர்பெறும் விசார மெல்லாம்
உரமுடன் செய்வோன் ருனே உத்தம முமூட்சுவென்றுங்
கரதலா மலக மென்னக் காட்டியு மதனிற் கூடித்
திரமுட னிருக்கச் செய்த திறமிகு குருவே போற்றி. 5

கட்டளை முதற்றெரு டங்கிக் கட்டிலா வசிட்ட மீருய்க்
கட்டற வெல்லாங் கூறிக் காண்டகு ஞானம் தன்னுல்
பட்டதுன் பங்க ளெல்லாம் பாழ்படப் போகச் செய்த
இட்டமாஞ்சோம சுந்த்ரன் இணையடி போற்றி போற்றி.6

தேட்டமாய்க் கேட்ட பாடந் திரும்பவுங் கேளா யென்று
வாட்டமில் சிவப்ர காச வள்ளலே ஈந்தாய் போற்றி
நாட்டமு மென்று முள்ளே நாட்டினு யாகின் மைந்தா
வாட்டமில் வீடா மென்ற வள்ளலே போற்றி போற்றி 7

காயநீர்க் குமிழி யென்று காட்டிய கருத்தைக் கொண்டு
மாயவாழ் வெனுமித் தைத்தான் மாயவேவிசாரஞ்செய்து
நேயமாய்க் காண்ப வற்றை நேதிநே தியெனும் வாக்கால்
ஆயவே கரியா னேனிங் கற்புதக் குருவே போற்றி. 8

காணுமிக் காட்சி யாவும் கற்பனை மனத்த தென்றே
பூணுதற் கென்ற வொன்று புவனியிற் காணே மைந்தா
காணுவான் நீயே யெங்குங் களங்கமிற் பிரம மென்று
ஊணினீர் சித்தன் கதையால் உண்மையாய்க் குருவே
போற்றி. 9

உத்தம ஜீவப் பிர்ம்ம ஐக்கிய முணரும் வண்ணம்
தத்துவ மசியாம் வாக்ய தத்துவ முணர்த்து வித்து
மித்தையே யுபாதி யாவும் மெய்மையா யில்லை யென்றும்
நித்தமு முணர்த்து மெங்கள் நின்மலக் குருவே போற்றி.

முத்தியை யடைதற் கேதா முயல்வினைச் செய்யுங் காலே
புத்தியும் புகழும் பெண்டிர் புகலுமே வந்து கூடும்
உத்தியா லதனைப்போக்க உதாலகன்கதையைச்சொல்லி
சித்தியாம் விராக மீந்த சின்மயக் குருவே போற்றி.

உகந்த தேசிகனே போற்றி உண்மையை உணர்த்து மெங்கள்
மிகுந்தமுத் திராம போற்றி மிகுதுற விறையே போற்றி
தகுமணு மலையே போற்றி சார்மகா தேவ போற்றி
சுகந்தரு சோம சுந்தர தேசிக போற்றி போற்றி. 12

வேண்டும் ஸ்ரீ சற்குருநாதன் துணை.

பஞ்சமூர்த்திகள் துதி

சீரணி புகழுங் கல்வியும் செல்வமும்
சிறப்பு மீயுமைங் கரனே
ஏரணி யாறு முகவனே எழிலுறு
கொற்ற வாளிறை யெந்தாய்
காரணி திருநெலே யாமுமை திருமிகு
கோவி லூர்வாழ் எங்குரு
நாரணி சோம சுந்தர னிணையடி
நாளுந் தொழுது வாழ்வாம்.

விநாயகானந்த சாமி
பொதட்டூர் பேட்டை
திருத்தணி தாலுகா

தி சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி - போன் 300.